**02.03.2020**

**பத்திரிக்கை செய்தி**

சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையம் சென்னை மாநகரினை ஒன்றோடொன்று இணைக்கும் மையமாகும், சென்னை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலைய தெரு மட்டத்தில் ஆயிரக்கணக்கான பயணிகள் ஒவ்வொரு நாளும் புறநகர் போக்குவரத்து, பிரதான பாதை, அலுவலகப் பணி, வணிகம் சார்ந்த பணிகள் மற்றும் சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து சேவை ஆகியவற்றிற்காக மெட்ரோ இரயிலை பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தை தனித்துவம் கொண்ட ஒரு இடமாக மாற்ற முடிவு செய்துள்ளது. சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் மின்னொளி அலங்காரத்துடன் 12 கண்ணாடி மின்தூக்கி மற்றும் 6 நுழைவாயில்களும் மற்றும் அரசினர் தோட்டம் மெட்ரோ இரயில் நிலையத்திற்கு அருகில் 2 திறந்த வகை கண்ணாடி நுழைவாயில்களையும் அமைக்கவுள்ளது.

இந்த மின்னொளி அலங்காரங்கள் கீழ்கண்ட தனித்துவம் வாய்ந்த இடங்களின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது.

1. ஜனாதிபதி மாளிகை
2. இந்தியா கேட்
3. ஹவுரா பாலம்.
4. கேன்டன் கோபுரம்
5. சியோல் கோபுரம்